**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.G.M.கஜேந்திர நாயுடு என்பவரின் வாரிசுதாரரான அன்னாரது மகன் திரு.G.தினேஷ்குமார் இளநிலை உதவியாளராக பணி நியமனம் –பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித்[ப.க.3(2)] துறை**

**அரசாணை (ப) எண்.54**

**நாள் 14.02.2024**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**சோபகிருது வருடம், மாசி 2**
**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.32994/ஜே/இ4/2023, நாள் 18.01.2024.

********

**ஆணை:–**

திருவள்ளூர் மாவட்டம், கேசிகண்டிகை, அரசு மேல்நிலைப்பள்ளியில், பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.G.M.கஜேந்திர நாயுடு என்பவர், பணிக்காலத்தில் 12.01.2014 அன்று காலமானார் என்றும், அன்னாரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.G.தினேஷ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 16.06.2015 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 06.06.1988 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில்

இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.G.தினேஷ்குமார் என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பார்வை இரண்டில் காணும், பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு நன்கு ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்டம், கேதிலண்டலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் காலமான திரு.G.M.கஜேந்திர நாயுடு என்பவரின் வாரிசான அவரது மகன் திரு.G.தினேஷ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
முதன்மைக் கல்வி அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
✓தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

*//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//*

பிரிவு அலுவலர்

திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3180/அ1/2023                    நாள்: .04.2024

பொருள்: பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி - திருவள்ளூர் மாவட்டம் - கே.ஜி.கண்டிகை, அரசு மேல்நிலைப்பள்ளி, பட்டதாரி ஆசிரியர் திரு.G.M.ராஜேந்திர நாயுடு என்பார் 12.01.2014 இல் இறப்பு - வாரிசுதாரரான மகன் திரு.G.தினேஷ்குமார் என்பவருக்கு இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முதல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை பெறப்பட்டமை - சார்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை: 1.திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண் 5000/அ1/2022, நாள் 13.10.2022
2. இவ்வலுவலக இ.தொ. எண்ணிட்ட கடிதம் நாள் 10.07.2023
3. அரசாணை (ப) எண் 54 பள்ளிக்கல்வி (பக.2(2)) துறை நாள் 14.02.2024
4. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண் 32664/இ1/இ4/2023, நாள் 11.03.2024

--------

திருவள்ளூர் மாவட்டம் கே.ஜி.கண்டிகை, அரசு மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து 12.01.2014 இல் காலமான திரு.G.M.ராஜேந்திர நாயுடு என்பாரின் வாரிசுதாரரான மகன் திரு.G.தினேஷ்குமார் என்பார் கனகம்மாசத்திரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு, விருப்ப மாறுதலில் கொளப்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளியில் தற்போது பணிபுரிந்து வருகிறார். சார்ந்த பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முதல் பணிவரன்முறை செய்து, பார்வை 4 இல் பெறப்பட்ட அரசாணை அசல், சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் சார்ந்த பணியாளருக்கு சார்பு செய்யப்படுகிறது. இவ்வாணையை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலினை அனுப்பிவைக்க, கொளப்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு - பார்வை 4 இல் காணும் அசல் ஆணை

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவள்ளூர்.

பெறுநர்
1.சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)
2.தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கொளப்பாக்கம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), திருவள்ளூர்